<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 203/2019 நாள்: 09.03.2026 பி.வா.சா.1 – ரவிச்சந்திரன்**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>**

வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி சீட்டில் வாதி வேண்டும் போது அசல் தொகையை வட்டியுடன் நான் செலுத்த வேண்டும் என்று கண்டுள்ளது, அந்த காரணத்தினால் வாதி என்னிடம் வாய்மொழியாக அசலையும், வடடியையும் கேட்ட பிறகு எனக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 5வது பத்தியில் இறுதியில் எனக்கு கடனை செலுத்தி வசதியில்லாததால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கடனை வாங்கவில்லை என்று நான் என்னுடைய முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த முன்ஜப்தி செய்வதற்கான மனுவை நான் படித்து பார்த்து, எதிருரை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எதிருரையில் 09.05.2019 அன்று மனு சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் வாதி நான் கடன் வாங்கியது பற்றியும், கடனுறுதி சீட்டு பற்றியும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனுவில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் வாதியிடம் நான் கடன் வாங்கி கொண்டு கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவில்லை என்ற விவரத்தை குறிப்பாக சொல்லவில்லை என்றால்

சரிதான். தாவா கடனை செலுத்த எனக்கு வசதியில்லை என்று வாதிக்கு நன்கு தெரியும் என்ற விவரத்தை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் எனக்கு கடன் வாங்க வேண்டிய அவசியமில்லை என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வட்டிக்கு கடன் வாங்கி கொண்டு கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கும் பழக்கமுண்டு என்றால் சரியல்ல. பொதுவாக நிரப்பப்படாத கடனுறுதி சீட்டை கையொப்பம் மட்டும் போட்டு எழுதி கொடுக்கும் வழக்கம் எனக்கு இல்லை. என்னுடைய எதிர்வழக்குரையிலும், முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் யாரோ ஒருவரிடம் நான் கடன் வாங்கும் போது நிரப்பப்படாத கையொப்பம் மட்டும் போட்டு கொடுத்த கடனுறுதி சீட்டை தற்போது வாதி பயன்படுத்தி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். ஞாபகம் இல்லை என்று நான் சொல்வது பொய் என்றும், இவ்வழக்கிற்காக அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி ஒரு மருத்துவர் என்று எனக்கு தெரியாது. வாதியின் மனைவியும் மருத்துவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நடத்தி வந்ததாக சொல்லப்படும் கடைக்கு அருகில் ஐஸ்வர்யா மருத்துவமனை என்ற பெயரில் வாதி மருத்துவமனை நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி ஐஸ்வர்யா மருத்துவமனையில் வாதி மற்றும் அவரது மனைவியும் மருத்துவராக பணிபுரிந்தார்கள் என்றால் சரிதான். நான் மேற்படி ஐஸ்வர்யா மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதில்லை. வாதி எனக்கு ஒரு போதும் மருத்துவ சிகிச்சை அளிக்கவில்லை. வாதிக்கும் எனக்கும் நன்கு பழக்கம் என்றால் சரியல்ல. எனது வியாபாரம் மூலமாக நான் வருடத்திற்கு ரூ.1 கோடி முதல் ரூ.1.5 கோடி வரை வரவு செலவு செய்வேன். வாதி தாக்கல் செய்த நொடிப்பு நிலை மனு விசாரணையில்

என்னை மேற்படி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி மனு விசாரணையில் ஒரே தெருவில் தொழில் செய்ததால் வாதிக்கும் எனக்கு நன்கு பழக்கம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கு திருப்பூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் கோடை கால வழக்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் என்னுடைய சொத்தை அவசர அவரசமாக விற்பனை செய்து வாதிக்கு கிடைக்ககூடிய பலன்களை கிடைக்காமல் செய்வதற்கு ஏற்பாடு செய்த காரணத்தினால் வாதி அவசரமாக கோடை கால நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல, நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே விற்பனை செய்துவிட்டேன் என்று சாட்சி கூறுகிறார். நான் தங்கவேல் என்பவருக்கு எனது சொத்தை 09.05.2019 அன்று விற்பனை செய்தேன் என்றால் சாட்சி தேதி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் என்னுடைய எதிர்வழக்குரையில் 09.05.2019 அன்று மேற்படி தங்கவேலுவிற்கு எனது சொத்தை விற்பனை செய்துவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் மேற்படி விவரத்தை நொடிப்பு நிலை மனுவிசாரணையிலும் ஒத்து கொண்டுள்ளேன் என்றால் சரிதான். 07.05.2019 அன்று இந்த வழக்கை கோடை கால நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்து, வழக்கு 10.05.2019 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான். 09.05.2019 ல் நான் எனது சொத்தை விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். நான் கிரையம் செய்து கொடுத்த தங்கவேல் எனது நண்பர் என்றால் சரியல்ல. தங்கவேல் எனக்கு பழக்கமானவரல்ல. நான் எனது சொத்தை தங்கவேலுவிற்கு கிரையம் செய்து கொடுப்பதற்கு முன்பாக கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்தேன், ஆனால் என்ன தேதியில் கிரைய ஒப்பந்தம் செய்து கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் நொடிப்பு நிலை மனு

விசாரணையில் 11.06.2018 ல் எனது சொத்து சம்பந்தமாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 08.12.2018 ல் ரூ.2 லட்சம் ரொக்கமாகவும், ரூ.6,45,000 காசோலையாகவும் பெற்று கொண்டு நான் கிரைய ஆவணம் தங்கவேலுவிற்கு எழுதி கொடுத்துவிட்டேன் என்று நொடிப்பு நிலை மனு விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 3வது நபர் ஒருவர் கொடுத்த நம்பிக்கையின் அடிப்படையில் நான் காசோலை வாங்கி கொண்டு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தேன், அந்த நபர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி காசோலையை வங்கியில் செலுத்தி பணத்தை எனது கணக்கில் பெற்று கொண்டேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காசோலையை எந்த வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. State Bank of India, City Union Bank உடுமலைபேட்டை கிளைகளில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது. நான் மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்பதை நிரூபிக்க வங்கி மேலாளரை நான் இவ்வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் விசாரிக்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். வாதியிடம் வாங்கிய பணத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் நிபமாக நானும், தங்கவேலும் ஒரு கிரைய ஆவணத்தை பொய்யாக ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் மனுவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை விட்டுவிடுங்கள் அதற்கு பதிலாக 2 மனைகளை தருகிறேன் என்று குறிப்பாணை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனைகள் ஏற்கனவே வங்கியில் அடமானத்தில் உள்ளது என்றால் சரிதான். வாதி எனக்கு கடன் கொடுத்ததை அவருடைய வருமான வரி கணக்கில் காட்டியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். நான் மேற்படி விவரத்தை மறுத்து

எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். நான் எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பமல்ல என்று நான் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் வாதியால் பொய்யாக ஏற்படுத்தப்பட்டவை. கடனுறுதி சீட்டில் உள்ள தேதி புதியதாக இடைச்செறுகளாக எழுதப்படவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடனுறுதி சீட்டை இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வரும் போது நான் பார்த்துள்ளேன். நான் எதிர்வழக்குரை மற்றும் எதிருரை தாக்கல் செய்வதற்கு முன்பாக மேற்படி கடனுறுதி சீட்டை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையை தாக்கல் செய்வதற்கு முன்பாக கடனுறுதி சீட்டை நான் பார்க்கவில்லை. நான் வாதியிடம் கடனை வாங்கி கொண்டு கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்த காரணத்தினால் தான் நான் கடனுறுதி சீட்டை நான் நேரில் பார்க்க முயற்சிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி கடனுறுதி சீட்டில் உள்ள தேதி இடைசெறுகளாக எழுதப்பட்டுள்ளது என்ற விவரத்தை எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சாட்சி அது பற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் தான் எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். நான் 9வது வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சொன்னதன் அடிப்படையில் தான் எழுத்தர் என்ற முறையில் சாட்சி வீரண்ணன் கடனுறுதி சீட்டை எழுதினார் என்றால் சரியல்ல. வீரண்ணன் வாதிக்கு வேண்டியவர் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாதியிடம் கடன் வாங்கி கொண்டு கடனுறுதி சீட்டு எழுதி வாங்கியதை சாட்சி வீரய்யைா, எழுதி வீரண்ணன் நேரடியாக பார்த்துள்ளார்கள் எனறால் சரியல்ல. நான் கடனுறுதி சீட்டில் கையொப்பமிட்டதை மேற்படி

வீரய்யையாவும், வீரண்ணன்னும் பார்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு தாவா தொகையை செலுத்த கடமைபட்டவன் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.09 16:48:15 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.